**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், இராமேஸ்வரம்.**
**முன்னிலை: திரு.S.B. சுஜித், B.A. B.L.,(Hons)**
**மாவட்ட உரிமையியல் மற்றும்**
**நீதித்துறை நடுவர், இராமேஸ்வரம்**

**2026-ம் ஆண்டு மே திங்கள் 26-ம் நாள் செவ்வாய்க்கிழமை**

**ஆண்டு பட்டிகை வழக்கு எண். 37/2017**
**(CNR.NO: TNRM05-000446-2017)**

1. காவல் நிலையத்தின் பெயர் மற்றும் குற்ற எண் : அரசுக்காக,
சார்பு ஆய்வாளர்,
தங்கச்சிமடம் காவல் நிலையம்,
குற்ற எண்.109/2009

**1 வது எதிரியின் விபரம்**

| | | | |
|---|---|---|---|
| 2. | பெயர் | : | கணேசன் (எ) ஓடப்பட்டி கணேசன் |
| 3. | த/பெ | : | பொன்னையா கவுண்டர் |
| 4. | தொழில் | : | -- |
| 5. | முகவரி | : | ஓடப்பட்டி, தேனி மாவட்டம். |
| 6. | வயது | : | 37/2009 |

**2 வது எதிரியின் விபரம் ( CC.No.46/2010 என்ற தாய் வழக்கில் 26.09.2017-ம் தேதியன்று விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்பட்டுள்ளது)**

| | | | |
|---|---|---|---|
| 2. | பெயர் | : | சந்திரன் (எ) தொட்டி சந்திரன் |
| 3. | த/பெ | : | சுப்பையாத்தேவர், |
| 4. | தொழில் | : | -- |
| 5. | முகவரி | : | கரையூர் தெரு, இராமேஸ்வரம். |
| 6. | வயது | : | 52/2009 |

7. சம்பவ நாள் : 04.11.2009-ம் தேதி இரவு
8. புகார் தேதி : 05.11.2009-ம் தேதி 17.00 மணி

| | | | |
|---|---|---|---|
| 9. | எதிரி கைது செய்யப்பட்ட நாள் | : | I) 1வது எதிரி கைது செய்யப்படவில்லை தலைமறைவு எதிரியாக குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.<br><br>ii) 1வது எதிரி P.T Warrant மூலமாக 21.12.2011–ம் தேதியன்று தாய் வழக்கான CC.No.46/2010 வழக்கில் ஆஜர்படுத்தப்பட்டுள்ளார்.<br><br>iii) 1வது எதிரி CC.No.37/2017 வழக்கில் பிடிக்கட்டளை நிறைவேற்றப்பட்டு 13.01.2026ம் தேதி கைது செய்யப்பட்டு 06.02.2026ம் தேதியன்று நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளார். |
| 10. | பிணையில் விடுவிக்கப்பட்ட நாள் | : | 06.02.2026ம் தேதி முதல் தீர்ப்பு பிறப்பிக்கப்பட்ட நாள் வரை நீதிமன்ற காவலில் இருந்து வந்தார். பிணையில் விடுவிக்கப்படவில்லை. |
| 11. | கோப்பிற்கு எடுக்கப்பட்ட நாள் | : | 08.04.2010 |
| 12. | விசாரணை துவங்கப்பட்ட நாள் | : | 20.02.2012 |
| 13. | விசாரணை முடிவுற்ற நாள் | : | 22.05.2026 |
| 14. | சாட்டப்பட்ட குற்றச்சாட்டுகள் | : | 1, 2 எதிரிகள் மீது பிரிவுகள் 457, 380 இதச படி |
| 15. | வனையப்பட்ட குற்றச்சாட்டுகள் | : | 1, 2 எதிரிகள் மீது பிரிவுகள் 457, 380 இதச படி |
| 16. | காலதாமதத்திற்கான காரணம் | : | 1ம் எதிரி கடந்த 25.11.2013 முதல் தலைமறைவாகி பிடிக்கட்டளை பிறப்பிக்கப்பட்டு நிலுவையில் இருந்தும் 13.01.2026ம் தேதி கைது செய்யப்பட்டு 06.02.2026ம் தேதியன்று நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளார். எனவே, காலதாமதம். |

17. அரசு தரப்பு சாட்சிகள் :

| முதல் விசாரணை | எதிரி தரப்பு குறுக்கு விசாரணை |
|---|---|
| அ.சா.1 – 20.02.2012 | அ.சா.1 – 20.02.2012 |

| | |
|---|---|
| அ.சா.2 – 20.02.2012 | அ.சா.2 – 20.02.2012 |
| அ.சா.3 – 19.03.2012 | அ.சா.3 – 19.03.2012 |
| அ.சா.4 – 19.03.2012 | அ.சா.4 – 19.03.2012 |
| அ.சா.5 – 19.03.2012 | அ.சா.5 – 19.03.2012 |
| அ.சா.6 – 19.02.2026 | அ.சா.6 – இல்லை |
| அ.சா.7 – 19.02.2026 | அ.சா.7 – இல்லை |
| அ.சா.8 – 24.02.2026 | அ.சா.8 – இல்லை |
| அ.சா.9 – 12.05.2026 | அ.சா.9 – 12.05.2026 |

| | | | |
|---|---|---|---|
| 18. | எதிரியிடம் பிரிவு 313(1)(b) Cr.P.C படி விசாரணை செய்யப்பட்ட நாள் | : | 15.05.2026 |
| 19. | எதிரி தரப்பு சாட்சிகள் | : | இல்லை |
| 20. | எதிரி தரப்பில் தாக்கல் செய்யப்பட் 311 Cr.P.C/348 BNSS பிரிவின் படியான மனுக்கள் | : | இல்லை |
| 21. | எதிரி தரப்பில் தாக்கல் செய்யப்பட் 320 Cr.P.C/359 BNSS பிரிவின் படியான மனுக்கள் | : | இல்லை |
| 22. | எதிரி தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட 70(2) Crpc/ 72(2) BNSS பிரிவின் படியான மனுக்கள் | : | இல்லை |
| 23. | அரசு தரப்பு வழக்கறிஞர் | : | திரு.மணிசங்கர் |
| 24. | எதிரி தரப்பு வழக்கறிஞர் | : | |
| 25. | எதிரியின் கூற்று | : | 1வது எதிரி தன் மீதான குற்றச்சாட்டுகளை மறுத்து பொய் வழக்கு என்று கூறினார். |
| 26. | தீர்ப்புரை பிறப்பிக்கப்பட்ட நாள் | : | 26.05.2026 |
| 27. | வழக்கின் முடிவு குறித்து எதிரிக்கு தகவல் தெரிவிக்கப்பட்ட நாள் | : | 26.05.2026 |

28. நீதிபதியின் முடிவு : **முடிவில், 1வது எதிரி பிரிவுகள் 457, 380 இதசவின் கீழ் குற்றவாளி இல்லை என தீர்மானித்து பிரிவு 248(1) Cr.P.C/271(1) BNSS ன் கீழ் விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது. 1ம் எதிரி பிணைமுறி பத்திரம் எதுவும் எழுதிக்கொடுக்கவில்லை. மேலும் இவ்வழக்கின் தாய் வழக்கான CC.No.46/2010-ல் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட PR.No.38/2010 ல் வழக்குச்சொத்துக்களான Item.No.1 முதல் Item.No.7 வரையிலான வெள்ளிப் பொருட்களை புகார்தாரரான அல்போன்ஸ் என்பவர் இந்நீதிமன்றத்தில் Crl.MP.No.661/2010, நாள்.05.03.2010 உத்தரவுப்படி இடைக்காலப் பொறுப்பில் பெற்றுச் சென்றுள்ளார். மேல்முறையீட்டு காலத்திற்கு பின் மேற்படி சொத்துக்களை அவரே நிரந்தர பராமரிப்பில் வைத்துக்கொள்ளும்படி உத்தரவிடப்படுகிறது.**

இவ்வழக்கு 08.04.2010 தேதியன்று குற்றவியல் நடைமுறைச் சட்டம், 1973 (இனி கீழ் வரும் இடங்களில் 'குவிமுச' என்று குறிப்பிடப்படும்) பிரிவு 190(1)ன் படி இந்நீதிமன்றத்தில் ஆண்டுப்பட்டிகை வழக்கு எண்.46/2010 ஆக 1, 2 எதிரிகளின் மீது இந்நீதிமன்றக் கோப்பிற்கு எடுக்கப்பட்டு, தாய் வழக்கில் 26.09.2017 ம் தேதியன்று 2 ம் எதிரி விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்பட்டுள்ளது. 1ம் எதிரியின் வழக்கு 10.07.2017 ம் தேதியன்று 1ம் எதிரியின் வழக்கு தனியாக ஆண்டுப்பட்டிகை வழக்கு எண்.37/2017 ஆக கோப்பிற்கு எடுக்கப்பட்டுள்ளது. இந்நீதிமன்றத்தின் முன்பு 22.05.2026 ம் தேதி இறுதி விசாரணைக்காக வந்தபோது குற்றமுறையிடுனர் தரப்பில் அரசு உதவி வழக்கறிஞர் நிலை-1 அவர்கள் ஆஜராகியும், 1வது குற்றம் சாட்டப்பட்டவர் தரப்பில் வழக்கறிஞர் திரு.S.வேல்முருகன் அவர்கள் ஆஜராகியும், விசாரணைக்கு வரப்பெற்று, இரு தரப்பும் கேட்கப்பட்டு, வழக்காவணங்களைப் பரிசீலனை செய்து, இன்று வரை

இந்த நீதிமன்றத்தில் பரிசீலனையிலிருந்து வந்த இந்த வழக்கில் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்,

**<u>தீர்ப்புரை</u>**

1.**<u>அரசு தரப்பு வழக்கின் சுருக்கம்</u>:**

கடந்த 04.11.2009ம் தேதி இரவு 02.00 மணியளவில் எம்.ஜி.ஆர் நகரில் குடியிருக்கும் புகார்தாரரான அல்போன்ஸ் மகன் ஜேம்ஸ் என்பவரின் வீட்டிற்குள் எதிரிகள் சென்று இரண்டாவது எதிரி காம்பவுண்ட் சுவர் அருகில் ஆள் பார்த்துக்கொள்ள முதலாவது எதிரி புகார்தாரர் வீட்டின் முன் கதவுப்பூட்டை உடைத்து உள்ளே சென்று பீரோவையும் உடைத்து, பீரோவிலிருந்து சுமார் 302 கிராம் எடையுள்ள பெரிய வெள்ளி தட்டு ஒன்றினையும், சுமார் 200 கிராம் எடையுள்ள வெள்ளி செம்பு ஒன்றினையும், சுமார் 103.500 கிராம் எடையுள்ள சிறிய வெள்ளி தட்டு ஒன்றினையும், சுமார் 81 கிராம் எடையுள்ள வெள்ளி சந்தனக் கிண்ணத்தையும் சுமார் 53.800 கிராம் எடையுள்ள வெள்ளி டம்ளர் ஒன்றையும், சுமாா 96.500 கிராம் எடையுள்ள வெள்ளி கிண்ணம் ஒன்றையும், கோல்டு வாட்ச் ஒன்றையும் ஆக மொத்தம் சுமார் ரூ.20,000/−ம் மதிப்புள்ள பொருட்களை திருடி இரண்டாவது எதிரியிடம் கொடுத்து தலைமறைவாகி குற்றம் புரிந்ததாக குற்றம்சாட்டப்பட்டவர்களான 1, 2 எதிரிகள் மீது பிரிவுகள் 457, 380 இந்திய தண்டனை சட்டம், 1860 (இனி கீழ் வரும் இடங்களில் '**இதச**' என்று குறிப்பிடப்படும்) படி தங்கச்சிமடம் காவல் நிலைய சார்பு ஆய்வாளரால் குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. குற்ற இறுதி அறிக்கை இந்த நீதிமன்றத்தால் ஆண்டுப்பட்டிகை வழக்கு எண்.46/2010 ஆக கோப்புக்கு எடுக்கப்பட்டு குவிமுச பிரிவு 204 கீழ் குற்றம் சாட்டப்பட்டவர்களுக்கு அழைப்பாணை அனுப்பியதன் பெயரில் 2வது குற்றம் சாட்டப்பட்டவர் இந்த நீதிமன்றத்தில் ஆஜரான போதும், 1ம் எதிரி சிறையிலிருந்து

நீதிமன்றத்தில் PT Warrant மூலமாக ஆஜர்படுத்தப்பட்டு வழக்கு ஆவணங்களின் நகல்கள் அனைத்தும் பிரிவு 207 குவிமுச படி இலவசமாக வழங்கப்பட்டது.

3. குற்றம் சாட்டப்பட்டவர்களுக்கு போதிய சந்தர்ப்பமும், அவகாசமும் வழங்கிய பின்பு குற்றச்சாட்டு வனைவதற்கு போதிய முகாந்திரம் இருப்பதாக தெரியவந்ததால் இந்த நீதிமன்றம் பிரிவு 240(1) குவிமுச படி குற்றம் சாட்டப்பட்டவர்களான 1, 2 எதிரிகள் மீது பிரிவுகள் 457, 380 இதச படி குற்றச்சாட்டு வனைந்து விளக்கி வினவியபோது குற்றம் சாட்டப்பட்டவர்கள் குற்றத்தை மறுத்ததால், அரசு தரப்பு சாட்சிகளை ஆஜர்படுத்த பிரிவு 242(1) குவிமுச கீழ் அழைப்பாணை அனுப்ப உத்தரவிடப்பட்டது. அ.சா.1 முதல் அ.சா.5 வரையிலான சாட்சிகள் விசாரிக்கப்பட்டு வழக்கு நிலுவையில் இருந்த போது 1ம் எதிரி தலைமறைவாகிய காரணத்தினால் பிடியாணை பிறப்பிக்கப்பட்டு 1ம் எதிரியின் வழக்கு ஆண்டுப்பட்டிகை வழக்கு எண்.37/2017 ஆக பிரிக்கப்பட்டு நிலுவையில் இருந்தது. 2ம் எதிரி தாய் வழக்கில் கடந்த 26.09.2017 ம் தேதியன்று விடுதலை செய்யப்பட்டு தீர்ப்பளிக்கப்பட்டுள்ளது.

4. அரசு தரப்பில் அ.சா.1 மற்றும் அ.சா.9 வரையிலான சாட்சிகள் விசாரிக்கப்பட்டுள்ளனர். அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ. 9 வரையிலான சான்றாவணங்கள் மற்றும் அ.சா.பொ.1 முதல் அ.சா.பொ.7 வரையிலான சான்று பொருட்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. அ.சா.1 புகார்தாரர், அ.சா.2 முதல் அ.சா.5 சம்பவத்தை கேள்வியுற்ற சாட்சிகள், அ.சா.6, அ.சா.7 பார்வை மகஜர் சாட்சிகள், அ.சா.8 ஒப்புதல் வாக்குமூல சாட்சி, அ.சா.9 புலன்விசாரணை அதிகாரி

5. <u>அரசு தரப்பில் விசாரணை செய்யப்பட்டுள்ள சாட்சிகளின் சாட்சியங்களின் சுருக்கம்:</u>

அ.சா.1 அல்போன்ஸ் தனது சாட்சியத்தில் தான் பாம்பன் சிவசக்தி நகரில் குடியிருந்து வருகிறேன் என்றும், மீன்பிடி தொழில் செய்து வருகிறேன் என்றும் தனது

மகன் கப்பலில் வேலை செய்கிறான் என்றும் தனது மருமகள் தனியாக இருப்பதால் அவர் அப்பா வீட்டிற்கு போய்விடுவார் என்றும் அதனால் நான் தான் மகன் வீட்டுக்கு சென்று படுத்துக்கொள்வேன் என்றும் கடந்த 01.11.2009 ம் தேதி தனக்கு உடல் நலம் சரியில்லாததால் தான் தனது வீட்டிலேயே படுத்து விட்டேன் என்றும் தனது மகன் வீட்டிற்கு போகவில்லையென்றும் கடந்த 05.11.2009 ம் தேதி காலை தனது மருமகள் வீட்டின் முன் கதவை உடைத்து பீரோவை உடைத்து அதில் உள்ள தனது மருமகளுக்கு சீதனமாக கொடுத்த வெள்ளி பொருளை திருடி சென்றுவிட்டதாக சொன்னார் என்றும் வெள்ளி செம்பு, வெள்ளி டம்ளர், வெள்ளி கும்பா, வெள்ளி தட்டு, வெள்ளி கிண்ணம் மற்றும் கைக்கடிகாரம் ஒன்று காணாமல் போனது என்றும் அது சம்பந்தமாக நான் அன்றே 05.11.09 ம் தேதியன்று தங்கச்சிமடம் காவல் நிலையத்தில் புகார் மனு கொடுத்தேன் என்றும் தன்னிடம் காட்டப்படுவது தான் அந்த புகார் மனு அ.சா.ஆ.1 என்றும் பின்பு இராமேஸ்வரம் காவல் நிலையத்தில் பொருட்கள் கைப்பற்றப்பட்டதாக சொன்னார்கள் என்றும் அந்த பொருட்களை நான் நீதிமன்றத்தில் வந்து பெற்று சென்றேன் என்றும் பெற்றுச் சென்ற அவைகளை நான் இந்நீதிமன்றத்தில் ஆஜர்படுத்துகிறேன் என்றும் அவைகள் வெள்ளி தட்டு பெரியது 1 சான்று பொருள் 1 என்றும் வெள்ளி செம்பு ஒன்று சான்று பொருள் 4 என்றும் வெள்ளி டம்ளர் ஒன்று சான்று பொருள் 5 என்றும் வெள்ளிக்கிண்ணம் ஒன்று சா.பொ.6 என்றும் டைட்டன் லேடிஸ் வாட்ச் ஒன்று சான்று பொருள் 7 என்றும் தொப்பி சந்திரன் என்ற நபர் தான் தனது பொருட்களை களவாடி சென்றதாக சொன்னார்கள் என்றும் இது சம்பந்தமாக போலீசார் தன்னை விசாரித்தார்கள் என்றும் சாட்சியம் அளித்துள்ளார்

அ.சா.2 முத்துலெட்சுமி தனது சாட்சியத்தில் தான் தற்பொழுது நாலுபனை கிராமத்தில் குடியிருந்து வருகிறேன் என்றும் அல்போன்ஸ் மகன் ஜேம்ஸ் (அ.சா.1) வீட்டில் வேலை செய்து வருகிறேன் என்றும் தான் அல்போன்ஸ் வீட்டில் வேலை பார்த்துவிட்டுப்பிறகு மகன் வீட்டிற்கு போன் துடைத்துவிடும்படி சொன்னார் என்றும்

தான் போய் வீட்டை பார்த்தபொழுது வீட்டின் கதவு உடைந்து கண்ணாடி முகப்பு உடைந்திருந்தது என்றும் இது சம்பந்தமாக அவரது மருமகள் சுதாவிடம் விபரத்தை சொன்னேன் என்றும் பின்பு அவர்கள் வீட்டிற்கு வந்து பார்த்தார்கள் என்றும் வந்து பார்த்துவிட்டு வெள்ளி கும்பா, செம்பு, தட்டு, டம்ளர் ஆகியவற்றை காணாமல் போய்விட்டதாக கூறினார்கள் என்றும் இது சம்பந்தமாக போலீசார் தன்னை விசாரித்தார்கள் என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

அ.சா.3 சுதா தனது சாட்சியத்தில் தான் தங்கச்சிமடம் எம்.ஜி.ஆர். நகரில் குடியிருக்கிறேன் என்றும் தனது கணவர் கப்பலில் வேலை பார்த்து வருகிறார் என்றும் தான் சம்பவ சமயம் கர்ப்பமாக இருந்ததால் தான் தன் தாயார் வீட்டில் இருந்தேன் என்றும் தனது வீட்டினை பூட்டிவிட்டு தன் தாயார் வீட்டுக்கு போயிருந்தேன் என்றும் தன் வீட்டில் வழக்கமாக தனது மாமனார் படுப்பார் என்றும் 2009 ம் வருடம் அக்டோபர் மாதத்திற்கு பின்பு மாதம், தேதி ஞாபகமில்லை என்றும் தான் தன் தாயார் வீட்டிற்கு போனபொழுது அன்றைய தினம் தனது வீட்டில் யாரும் படுத்துக்கொள்ளவில்லை என்றும் தனது வீட்டில் தனது திருமண சீராக கொடுத்த வெள்ளிச்சாமான்களான வெள்ளி கிண்ணம், டம்ளர், ஒரு சிறிய வெள்ளி தட்டு, பெரிய வெள்ளி தட்டு, வெள்ளி செம்பு, ஒரு வெள்ளி சந்தன பேழா ஆகியவை காணாமல் போய்விட்டது என்றும் வீட்டை உடைத்து யாரோ திருடிவிட்டார்கள் என்றும் இது குறித்து மறுநாள் காலை வீட்டினை பார்த்த நபர்கள் தனக்கு தகவல் சொன்னார்கள் என்றும் இது சம்பந்தமாக தனது மாமா காவல் நிலையம் சென்று புகார் கொடுத்தார் என்றும் பின்னர் கொஞ்சநாள் கழித்து மேற்படி பொருட்கள் கிடைத்து விட்டதாக சொல்லி தனது மாமனார் அந்த பொருட்களை வாங்கி வந்துவிட்டார் என்றும் இது சம்பந்தமாக போலீசார் தன்னை விசாரித்தார்கள் என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

அ.சா.4 அயரின்மேரி தனது சாட்சியத்தில் தான் தங்கச்சிமடம் சவேரியார் நகரில் குடியிருந்து வருகிறேன் என்றும் சுதா தனது மகள் என்றும் தனது மகளை எம்.ஜி.ஆர்.

நகரிலுள்ள ஜேம்ஸ் என்பவருக்கு திருமணம் செய்து கொடுத்தேன் என்றும் தனது மருமகன் கப்பலில் வேலை பார்த்து வருகிறார் என்றும் தனது மகள் கர்ப்பமாக இருந்ததால் அவர் வீட்டை பூட்டிவிட்டு தன் வீட்டிற்கு வந்து தங்கியிருந்தார் என்றும் இரவு வீட்டிற்கு காவலாக அவர் மாமா போய் படுத்திருப்பார் என்றும் கடந்த 04.11.2009 ம் தேதியன்று தனது மகள் தன் வீட்டிற்கு வந்துவிட்ட பிறகு அன்று இரவு யாரும் அவர் வீட்டில் காவலுக்கு படுக்கவில்லை என்றும் மறுநாள் காலை வீட்டிற்கு வேலைக்கு வந்த பெண் வீட்டின் கதவு, கண்ணாடிகள் உடைந்து கிடப்பதாக தகவல் சொன்னார் என்றும் போய் பார்த்தபொழுது கதவு உடைக்கப்பட்டு துணிமணிகள் சிதறி கிடந்தது என்றும் தான் தனது மகளுக்கு திருமணத்தின்போது சீர் கொடுத்திருந்த வெள்ளிச்சாமான்கள் அனைத்தும் காணாமல் போனது என்றும் இது சம்பந்தமாக போலீசார் தன்னை விசாரித்தார்கள் என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

அ.சா.5 சுதிகர் தனது சாட்சியத்தில் தான் தற்போது தங்கச்சிமடம் சவேரியார் நகரில் குடியிருந்து வருகிறேன் என்றும் தான் கருவாடு வியாபாரம் செய்கிறேன் என்றும் சாட்சி சுதா தனது அக்கா மகள் ஆவார் என்றும் அவரை தங்கச்சிமடத்தில் ஜேம்ஸ் என்பவருக்கு திருமணம் செய்து கொடுத்தோம் என்றும் அவர் கப்பலில் வேலை பார்க்கிறார் என்றும் சுதா வீட்டில் அவர் மட்டும் தான் இருந்தார் என்றும் கர்ப்பமாக இருந்ததால் அவர் அம்மா வீட்டுக்கு வந்துவிட்டார் என்றும் கடந்த 04.11.2009 ம் தேதியன்று சுதா வீட்டில் களவு போய்விட்டதாக தனக்கு தகவல் வந்தது என்றும் தான் உடனே போய் பார்த்தபோது வீட்டுக்கதவுகள் உடைக்கப்பட்டு பொருட்கள் சிதறி கிடந்தது என்றும் வீட்டில் வைக்கப்பட்டிருந்த வெள்ளிச்சாமான்கள் காணாமல் போயிருந்தது என்றும் சுதாவின் மாமனார் காவல் நிலையத்தில் புகார் கொடுத்ததன்பேரில் போலீசார் தன்னை விசாரித்தார்கள் என்றும் சாட்சியம் அளித்துள்ளார்

அ.சா.6 கஸ்பர் பெர்னண்டோ தனது சாட்சியத்தில் தான் தற்போது தங்கச்சிமடத்தில் குடியிருந்து கொண்டு பத்திர விற்பனையாளராக தொழில் செய்து வருவதாகவும், தன்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள முதலாவது கையொப்பம் என்னுடையதாகும், அந்த பார்வை மகஜரில் உள்ள முதலாவது கையொப்பம் அ.சா.ஆ.2 எனவும், மேற்சொன்ன அந்த கையொப்பம் தான் தங்கச்சிமடத்தில் மெயின்ரோட்டில் உள்ள எம்ஜிஆர் நகரில் உள்ள ஜேம்ஸ் என்பவரின் வீட்டில் வைத்து தங்கச்சிமடம் காவல் நிலைய சார்பு ஆய்வாளர் ஜேம்ஸ் வீட்டில் களவு போனது சம்பந்தமாக வரைபடம் தயார் செய்ததற்காக செய்ததாகவும், தானும் இக்னேசியஸ் மரியான், த/பெ.ஜோசப் என்பவரும் கையொப்பம் செய்ததாகவும் சாட்சியம் அளித்துள்ளார்.

அ.சா.7 இக்னேஷ் மரியான் தனது சாட்சியத்தில் தான் தற்போது தங்கச்சிமடத்தில் குடியிருந்து கொண்டு மீன்பிடித் தொழில் செய்து வருவதாகவும், தன்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள இரண்டாவது கையொப்பம் தன்னுடையதுதான் எனவும், அந்த பார்வை மகஜரில் உள்ள இரண்டாவது கையொப்பம் அ.சா.ஆ.3 எனவும், மேற்சொன்ன அந்த கையொப்பம் தான் தங்கச்சிமடத்தில் மெயின்ரோட்டில் உள்ள எம்ஜிஆர் நகரில் உள்ள ஜேம்ஸ் என்பவரின் வீட்டில் வைத்து தங்கச்சிமடம் காவல் நிலைய சார்பு ஆய்வாளர் ஜேம்ஸ் வீட்டில் களவு போனது சம்பந்தமாக வரைபடம் தயார் செய்ததற்காக செய்ததாகவும், தன்னுடன் கஸ்பர், த/பெ.அந்தோணிசாமி என்பவரும் கையொப்பம் செய்தாகவும் சாட்சியம் அளித்துள்ளார்.

அ.சா.9 மகேஷ்வரி தனது சாட்சியத்தில் தான் தற்போது ஆய்வாளராக அனைத்து மகளிர் கா.நிலையம் ஆண்டிப்பட்டி, தேனி மாவட்டத்தில் பணிபுரிந்து வருவதாகவும், கடந்த 05.11.2009ம் தேதி 17.00 மணிக்கு தான் தங்கச்சிமடம் காவல்

நிலையத்தில் சார்பு ஆய்வாளராக பணிபுரிந்தபோது பாம்பன் சிவசக்தி நகர் சந்தியாகு மகன் அல்போன்ஸ் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகார் மனுவைப் பெற்று புகாரின் தன்மைக்கேற்ப நிலைய குற்ற எண் 109/2009 சட்டப்பிரிவுகள் 457, 380 இதசவின் கீழ் வழக்கு பதிவு செய்ததாகவும், முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.4 எனவும், அன்றைய தினம் 18.00 மணிக்கு சம்பவ இடம் சென்று சாட்சிகள் கஸ்பார் பெர்ணாண்டோ, லிக்னேசியஸ் மரியோன் ஆகியோர்கள் முன்னிலையில் மாதிரி வரைபடம் பார்வை மகஜர் தயார் செய்ததாகவும், மாதிரி வரைபடம் மற்றும் பார்வை மகஜர் அ.சா.ஆ.5 மற்றும் அ.சா.ஆ.6 எனவும், அதன் பின்பு சாட்சிகள் அல்போன்ஸ், சுதா, அயரின்மேரி, சுதியா, முத்துலெட்சமி, கஸ்பார் பெர்ணாண்டோ, லிக்னேசியஸ் மரியோன் ஆகியோர்களை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்ததாகவும், 14.11.2009 ம் தேதி இந்த வழக்கின் 2 வது எதிரி சந்திரன் என்ற தொட்டி சந்திரன் இராமேஸ்வரம் கோவில் காவல் நிலையத்தில் கைதாகி அவர் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தின்பேரில் இந்த வழக்கில் 1ம் எதிரி ஓடப்பெட்டி கணேசன் என்பவரும் இணைந்து வாதியின் வீட்டில் உள்ள பொருட்களை திருடியதாக சொல்லியதின்பேரில் கோவில் காவல் நிலைய வழக்கின் ஆய்வாளர் திரு.நாகராஜன் அவர்கள் கைப்பற்றி வைத்திருந்த சொத்துக்களை பெற்று அத்தாட்சி மற்றும் படிவம் 91 மூலம் அனுப்பிவைத்ததாகவும், 300 கிராம் வெள்ளி தட்டு, 200 கிராம் வெள்ளி செம்பு, 103.5 கிராம் வெள்ளி தட்டு ஒன்று, 81 கிராம் வெள்ளி கின்னம், 53.800 கிராம் வெள்ளி டம்ளர், 96.500 கிராம் வெள்ளி கின்னம், லேடீஸ் கோல்ட் வாட்ச் ஒன்று ஆகியவற்றை கைப்பற்றி அத்தாட்சி மற்றும் படிவம் 91 மூலம் நீதிமன்றத்திற்கு அனுப்பிவைத்தததாகவும், தன்னிடம் காட்டப்படும் புகைப்படத்தில் உள்ள வெள்ளிப்பொருட்கள்தான் இவ்வழக்கில் ஒப்படைக்கப்பட்டதாகவும், மேற்சொன்ன வழக்கு சொத்துக்கள் நான்கு எண்ணிக்கை அ.சா.பொ.1 முதல் அ.சா.பொ.7 ஆக குறியீடு செய்யப்படுகிறது. அத்தாட்சி உண்மை நகல் அ.சா.ஆ–7 எனவும், படிவம் 91 உண்மை நகல் அ.சா.ஆ.8 எனவும், குறியீடு செய்யப்படுகிறது. 2ம் எதிரி கொடுத்த

ஒப்புதல் வாக்குமூலத்தில் அனுமதிக்கப்பட்ட பகுதி "என்னை கூட்டிச் சென்றால் .... வெள்ளிக் கொழுசு, வெள்ளி பாத்திரங்கள் இவைகளை எடுத்து தங்களிடம் ஆஜர்படுத்துகிறேன்" என்பது அ.சா.ஆ.9 எனவும், அதன் பின்பு சாட்சிகள் அல்போன்ஸ் என்பவரின் மறுவாக்குமூலத்தை பதிவு செய்ததாகவும், பரமேஸ்வரன், ராமன் ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்ததாகவும், 23.11.2009 ம் தேதி 16.50 மணிக்கு மதுரை மத்திய சிறைச்சாலை சென்று எதிரி சந்திரன் என்பவரை பார்மல் அரஸ்ட் செய்து நீதிமன்றத்தில் சமர்ப்பித்து பி.டி. வாரண்ட் பெறப்பட்டு நீதிமன்றக்காவலுக்கு உட்படுத்தியதாகவும், இத்துடன் தனது புலன்விசாரணையை முடித்துக்கொண்டு 2 எதிரிகள் மீது சட்டப்பிரிவுகள் 457, 380 இதசவின் கீழ் 23.01.2010 ம் தேதி குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்ததாகவும் சாட்சியம் அளித்துள்ளார். அ.சா.9–ன் சாட்சியத்துடன் அரசுத்தரப்பு சாட்சியம் முடிக்கப்பட்டது. ஒப்புதல் வாக்குமூல சாட்சியான அ.சா.8 திரு.பரமேஸ்வரன் அரசுத்தரப்பு வழக்கை மறுத்து பிறழ் சாட்சியாக மாறியுள்ளார்.

**Questioning U/s.313(i)(b) Cr.P.C**

6. அரசுத்தரப்பு சாட்சிகளின் விசாரணை முடிவுற்றவுடன் சாட்சியங்கள் மற்றும் ஆவணங்களிலிருந்து குற்றம் சாட்டப்பட்டவரான 1வது எதிரிக்கு பாதகமாக உள்ளவை குறித்து 313(1)(ஆ) Cr.P.C–ன் கீழ் விளக்கி வினவியபோது அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சியங்கள் அனைத்தும் பொய் என்று கூறினார். தனது தரப்பில் விசாரணை செய்ய சாட்சிகள் இல்லை என்று கூறினார்.

**Point for determination**

**7. இந்நிலையில், குற்றம் சாட்டப்பட்டவரான 1வது எதிரி மீது சுமத்தப்பட்ட பிரிவுகள் 457, 380 இதச படியான குற்றச்சாட்டு அரசுத் தரப்பில் ஆவணங்கள் மற்றும் சாட்சியங்கள் மூலம் சந்தேகத்திற்கிடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளதா? இல்லையா?**

**என்பதே இந்த வழக்கில் தீர்க்கப்பட வேண்டிய பிரச்சனை ஆகும்.**

**இருதரப்பு வாதங்கள்**

8. இவ்வழக்கில் கற்றறிந்த அரசு உதவி வழக்கறிஞர் நிலை–2 தனது வாதத்தில் புகார்தாரர் அ.சா.1, சம்பவத்தை கேள்வியுற்ற சாட்சிகளான அ.சா.2 முதல் அ.சா.4 மற்றும் அ.சா.9 புலன்விசாரணை அதிகாரியான சார்பு ஆய்வாளரின் சாட்சியத்தின் மூலம் அரசு தரப்பு வழக்கு நிரூபணம் செய்யப்பட்டுள்ளது. எனவே, குற்றம் சாட்டப்பட்டவர்களான 1வது எதிரிக்கு தக்க தண்டனை வழங்குமாறு வாதிடப்பட்டது.

9. குற்றம்சாட்டப்பட்டவர்களான 1வது எதிரி தரப்பில் ஆஜரான கற்றறிந்த வழக்கறிஞர்கள் தனது வாதத்தில், புகார்தாரர் அ.சா.1, அ.சா.2 முதல் 4 வரையிலான சாட்சிகள் சம்பவத்தை நேரடியாக பார்க்கவில்லை என்றும், 1வது எதிரியிடம் ஒப்புதல் வாக்குமூலம் பெறப்படவில்லை அல்லது எவ்வித பொருள்களும் கைப்பற்றப்படவில்லை என்றும், இவ்வழக்கில் கோவில் காவல்நிலையத்தில் 1ம் எதிரியின் மீது முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து 2ம் எதிரியை கைது செய்து ஒப்புதல் வாக்குமூலம் பெற்ற புலன்விசாரணை அதிகாரியான திரு.நாகராஜன் விசாரிக்கப்படவில்லை என்றும், அவரை விசாரித்தால் தான் வழக்கின் உண்மை தன்மை தெரியும் என்றும், இவ்வழக்கின் வழக்குச் சொத்துக்களை ஒப்படைத்த அ.சா.9 புலன்விசாரணை அதிகாரியான காவல் ஆய்வாளரின் சாட்சியத்தை மட்டும் வைத்து குற்றம் சாட்டப்பட்டவரான 1வது எதிரி குற்றவாளி என்று முடிவு செய்ய முடியாது. எனவே, குற்றம்சாட்டப்பட்டவரான 1வது எதிரியை விடுதலை செய்ய வேண்டும் என்று வாதிடப்பட்டது.

**Appreciation of Evidence**

10. இவ்வழக்கில் புகார்தாரரான அ.சா.1 அல்போன்ஸ் என்பவர் தனது முதல்விசாரணை சாட்சியத்தில் தான் கொடுத்த புகார் மனு அ.சா.ஆ.1–ல்

குறிப்பிடப்பட்ட வெள்ளி பொருட்கள் மற்றும் கைக்கடிகாரங்கள் ஆகியவை காணாமல் போனது தொடர்பாக புகார் மனுவை ஒத்திசைந்து சாட்சியமளித்துள்ளார். அ.சா.2 முதல் அ.சா.5 வரையானவர்கள் மேற்சொன்ன புகார்தாரரின் சாட்சியத்தை ஒத்திசைந்து சாட்சியமளித்துள்ளார்கள். இதன்மூலம் கடந்த 04.11.2009 ம் தேதி இரவு நேரத்தில் புகார்தாரரின் வீட்டின் முன்கதவு உடைக்கப்பட்டதும், பீரோ உடைக்கப்பட்டதும், அதிலிருந்த 836.800 கிராம் வெள்ளிப் பொருட்கள் மற்றும் கைக்கடிகாரம் ஒன்று மதிப்பு சுமார் ரூ.20,000/- ஆகியவை திருடப்பட்டதும், அது தொடர்பாக அ.சா.ஆ.1 புகார் மனு கொடுக்கப்பட்டதும் தெரிய வருகிறது.

11. அ.சா.1 முதல் அ.சா.5 வரையானவர்கள் இவ்வழக்கை கண்ணுற்ற சாட்சிகள் அல்ல என்பதால் மற்ற சூழ்நிலை சாட்சியத்தின் அடிப்படையில் இவ்வழக்கை தீர்மானிக்க வேண்டியது அவசிமாகும். இந்த வழக்கின் புலன்விசாரணை அதிகாரியான அ.சா.9 மகேஸ்வரி என்பவர் தனது முதல்விசாரணை சாட்சியத்தில் 14.11.2009 ம் தேதியன்று 2 ம் எதிரி இராமேஸ்வரம் கோவில் காவல்நிலையத்தில் கைது செய்யப்பட்டு ஆய்வாளர் நாகராஜன் என்பவர் முன்னிலையில் கொடுத்த தன்னிச்சையான ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் 1 மற்றும் 2 ம் எதிரிகள் வாதியின் வீட்டிலுள்ள பொருட்கள் திருடப்பட்டிருந்ததாக தெரியவந்து அதனடிப்படையில் இந்த வழக்குச் சொத்துக்கள் அத்தாட்சியில் கைப்பற்றப்பட்டதாக சாட்சியமளித்துள்ளார். இவ்வழக்கில் ஒப்புதல் வாக்குமூல சாட்சியாக முன்னிடப்பட்டு அ.சா.8 பரமேஸ்வரன் என்பவர் ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள சாட்சிக் கையொப்பம் தன்னுடையது அல்ல என்றும், அத்தாட்சியில் உள்ள கையொப்பம் காவல்துறையினர் கேட்டுக்கொண்டதால் போட்டுக்கொடுத்ததாக சாட்சியமளித்துள்ளார். மேற்சொன்ன அ.சா.8 பரமேஸ்வரன் தாய் வழக்கிலும், தற்போதைய வழக்கிலும் பிறழ் சாட்சியம் அளித்துள்ளது தெரிய வருகிறது. அரசுத்தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்பட்ட போதிலும் அரசுத்தரப்பு வழக்கிற்கு ஆதரவாக எவ்வித சாட்சியமும் பெறப்படவில்லை. மற்றொரு ஒப்புதல்

வாக்குமூல சாட்சியான வழக்கு பட்டியல் சாட்சி 9 திரு.ராமர் என்பவர் இறந்துவிட்ட காரணத்தினால் நீதிமன்றத்தில் சாட்சியாக விசாரிக்கப்படவில்லை. எனவே, அ.சா.8ன் சாட்சியம் மூலமாக 2ம் எதிரி தன்னிச்சையாக ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்து இவ்வழக்கு சொத்துக்கள் கைப்பற்றப்பட்டதாக இந்நீதிமன்றத்தால் தீர்மானிக்க இயலாது. எனவே, அ.சா.ஆ.7 அத்தாட்சி மற்றும் அ.சா.ஆ.9 ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி ஆகியவை சந்தேகத்திற்கிடமின்றி நிரூபிக்கப்படவில்லை. எனவே, 2ம் எதிரியின் ஒப்புதல் வாக்குமூலமான பிரிவு.25 இந்திய சாட்சிய சட்டத்தின் படி ஏற்றுக்கொள்ள இயலாத ஆவணமாகிறது.

12. எனவே, அதனடிப்படையில் 1ம் எதிரி இவ்வழக்கு குற்ற சம்பவத்தில் ஈடுபட்டதாக இந்நீதிமன்றத்தால் தீர்மானிக்க இயலாது. இவ்வழக்கில் விசாரிக்கப்பட்ட பார்வை மகஜர் சாட்சிகளான அ.சா.6 மற்றும் அ.சா.7 ஆகியோர் பார்வை மகஜர் தயாரிக்கப்பட்டது தொடர்பாக சாட்சியமளித்திருந்தாலும், சம்பவம் தொடர்பாகவோ, 1, 2 எதிரிகள் குற்றச்செயலில் ஈடுபட்டது தொடர்பாகவோ அவர்களது சாட்சியத்தின் மூலமாக தீர்மானிக்க இயலாது. இவ்வழக்கின் புலன்விசாரணை அதிகாரியான அ.சா.9 மகேஸ்வரி என்பவர் வழக்கு சம்பவத்திற்கு பிறகு மேற்கொள்ளப்பட்ட புலன்விசாரணை தொடர்பாகவும், கோவில் காவல்நிலைய ஆய்வாளர் நாகராஜன் கைப்பற்றி வைத்திருந்த சொத்துக்களை படிவம்–91 மூலமாக இவ்வழக்கில் ஆஜர்படுத்தப்பட்டது தொடர்பாகவே சாட்சியமளித்துள்ளார். எனவே, அவரது சாட்சியம் மூலமாகவும், 2ம் எதிரியிடமிருந்து இந்த வழக்கின் சொத்துக்கள் கைப்பற்றப்பட்டதாக இந்நீதிமன்றத்தால் தீர்மானிக்க இயலாது. மேற்சொன்ன விவாதங்கள் மற்றும் சாட்சியங்கள் அடிப்படையில் கடந்த 04.11.2009ம் தேதியன்று இரவு 02.00 மணியளவில் தங்கச்சிமடம் எம்ஜிஆர் நகரில் உள்ள அல்போன்ஸ் என்பவர் வீட்டில் 1வது எதிரி முன் கதவு பூட்டை உடைத்து உள்ளே சென்று பீரோவை உடைத்தன் மூலமாக பிரிவு.457 இதசவின் கீழும், 1ம் எதிரி பீரோவில் இருந்த 836.800 கிராம் வெள்ளிப் பொருட்கள் மற்றும் கைக்கடிகாரம் ஒன்று

மதிப்பு சுமார் ரூ.20,000/– ஆகியவை திருடியதன் மூலமாக பிரிவு.380 இதசவின் கீழும் குற்றம்புரிந்ததாக அரசுத்தரப்பில் சந்தேகத்திற்கிடமின்றி நிரூபிக்கப்படவில்லை என்று 1ம் எதிரி பிரிவு.248(1) குவிமுசவின் கீழ் விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது.

13. மேலும் இவ்வழக்கின் தாய் வழக்கான CC.No.46/2010–ல் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட PR.No.38/2010 ல் வழக்குச்சொத்துக்களான Item.No.1 – சுமார் 302 கிராம் எடையுள்ள பெரிய வெள்ளி தட்டு ஒன்று, Item.No.2 –சுமார் 200 கிராம் எடையுள்ள வெள்ளி செம்பு ஒன்று, Item.No.3 – சுமார் 103.500 கிராம் எடையுள்ள சிறிய வெள்ளி தட்டு ஒன்று, Item.No.4 –சுமார் 81 கிராம் எடையுள்ள வெள்ளி சந்தனக் கிண்ணம் ஒன்று, Item.No.5 – சுமார் 53.800 கிராம் எடையுள்ள வெள்ளி டம்ளர் ஒன்று, Item.No.6 – சுமார் 96.500 கிராம் எடையுள்ள வெள்ளி கிண்ணம் ஒன்று, Item.No.7 –கோல்டு லேடீஸ் வாட்ச் ஒன்று ஆகியவைகளை புகார்தாரரான அல்போன்ஸ் என்பவர் இந்நீதிமன்றத்தில் Crl.MP.No.661/2010, நாள்.05.03.2010 உத்தரவுப்படி இடைக்காலப் பொறுப்பில் பெற்றுச் சென்றுள்ளார். மேல்முறையீட்டு காலத்திற்கு பின் மேற்படி சொத்துக்களை அவரே நிரந்தர பராமரிப்பில் வைத்துக்கொள்ளும்படி உத்தரவிடப்படுகிறது.

இத்தீர்ப்பு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு 2026–ம் ஆண்டு மே திங்கள் 26ம் நாளாகிய இன்று என்னால் அவையறிய பகரப்பட்டது.

SUJITH Digitally signed by SUJITH Date: 2026.05.26 17:53:09 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர்,
இராமேஸ்வரம்.

**<u>பின்னிணைப்பு :-</u>**

**(i) <u>அரசுத் தரப்பு சாட்சிகள்:</u>**

| | | | |
|---|---|---|---|
| அ.சா.1 | – | அல்போன்ஸ் | புகார்தாரர் |
| அ.சா.2 | – | முத்துலெட்சுமி | கேள்வியுற்ற சாட்சி |
| அ.சா.3 | – | சுதா | கேள்வியுற்ற சாட்சி |
| அ.சா.4 | – | அயரின் மேரி | கேள்வியுற்ற சாட்சி |
| அ.சா.5 | – | சுதிகர் | கேள்வியுற்ற சாட்சி |
| அ.சா.6 | – | கஸ்பார் பர்னாண்டோ | பார்வை மகஜர் சாட்சி |
| அ.சா.7 | – | இக்னேசியஸ் மரியான் | பார்வை மகஜர் சாட்சி |
| அ.சா.8 | – | பரமேஸ்வரன் | ஒப்புதல் வாக்குமூல சாட்சி |
| அ.சா.9 | – | மகேஸ்வரி | புலன்விசாரணை அதிகாரி |

**(ii) <u>அரசு தரப்பு சான்றாவணங்கள்:</u>**

| | | |
|---|---|---|
| அ.சா.ஆ.1 | 05.11.2009 | புகார் மனு |
| அ.சா.ஆ.2 | 05.11.2009 | பார்வை மகஜரில் உள்ள முதலாவது கையொப்பம் |
| அ.சா.ஆ.3 | 05.11.2009 | பார்வை மகஜரில் உள்ள இரண்டாவது கையொப்பம் |
| அ.சா.ஆ.4 | 05.11.2009 | முதல் தகவல் அறிக்கை உண்மை நகல் |
| அ.சா.ஆ.5 | 05.11.2009 | பார்வை மகஜர் |
| அ.சா.ஆ.6 | 05.11.2009 | மாதிரி வரைபடம் |
| அ.சா.ஆ.7 | 14.11.2009 | அத்தாட்சி உண்மை நகல் |
| அ.சா.ஆ.8 | 14.11.2009 | படிவம் 91 உண்மை நகல் |
| அ.சா.ஆ.9 | 14.11.2009 | 2ம் எதிரி கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தில் அனுமதிக்கப்பட்ட பகுதி "என்னை கூட்டிச் |

சென்றால் .... வெள்ளிக் கொழுசு, வெள்ளி பாத்திரங்கள் இவைகளை எடுத்து தங்களிடம் ஆஜர்படுத்துகிறேன்" என்பது எனவும்,

**(iii) <u>அரசு தரப்பு சான்று பொருள் :</u>**

அ.சா.பொ.1 முதல் அ.சா.பொ.7 – புகைப்படத்தில் உள்ள வெள்ளிப்பொருட்கள் மற்றும் கோல்டு லேடீஸ் வாட்ச்

**(vi) <u>1 வது எதிரி தரப்பு சாட்சிகள், சான்றாவணங்கள் மற்றும் சான்றுபொருட்கள் :</u>**

இல்லை.

**<u>குறிப்பு:</u>**

1. எந்த ஒரு சாட்சியும் மூன்று முறைக்கு மேல் நிறுத்தி வைக்கப்படவில்லை.
2. வழக்கின் முடிவு குறித்து காவல்துறையினருக்கு தெரிவிக்கப்பட்டது.
3. வழக்கு விசாரணையின்போது 1 வது எதிரி நீதிமன்ற காவலில் இருந்தார்.

SUJITH Digitally signed by SUJITH Date: 2026.05.26 17:53:14 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர்,
இராமேஸ்வரம்.